உ

சிவமயம்

அருள்மிகு தெண்டாயுதபாணி துணை

# <u>சிங்கை நகரத்தார் மலர்</u>

MICA(P) 185/03/2006



மரம்- 5 கிளை-1
2007/01 01/02/2007

# பொருளடக்கம்


1. அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே!-கவிதை
2. தலைவர் உரை
3. ஆசிரியர் உரை

அ. நிறைவேறிய நிகழ்ச்சிகள்
1. பிள்ளையார் நோன்பு
2. தொண்டர் குழு உபயம்
3. வருடாந்திர பொதுக்கூட்டம்
4. தைப் பொங்கல்

ஆ. நடைபெறவிருக்கும் நிகழ்ச்சிகள்
1. புனர்பூசம் , தைப்பூசம்
2. மகமைக் கூட்டம்
3. FUNFAIR DAY
4. உல்லாசப் பயணம்

இ. நகரத்தார் பக்கம்
1. ஆன்மீகம்
2. தாலாட்டுப் பாட்டு
3. ஹோ ச்சீ மின் நகரம், வியட்நாம் - நேற்றைய சைகோன்
4. மாறித்தான் போய்விட்டது வாழ்க்கை
5. உண்மையில் பைத்தியங்கள்

ஈ. மகளிர் பக்கம்
உ.குழந்தைகள் பக்கம்
ஊ.இதர செய்திகள்
1.பிறப்பு
2.கோயில் நிகழ்ச்சிகள்
3.புது உறுப்பினர்கள்
4.முகவரி மாற்றம்



சிங்கை நகரத்தார் மலர்
15A,தேங்க் ரோடு
சிங்கப்பூர் 238065
தொலைபேசி எண்:6737 9393
http://www.sttemple.com
http://www.singainagarathaar.com

# அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே

கடல் தாண்டிப் புறப்பட்டோம் செல்வம் ஈட்ட
உனைக் கண்டதுமே உருகி நின்றோம் உள்ளம் ஈர்க்க
இருள் அகற்றி நிற்கும் கதிரவன் நீயே
அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே.

இன்னல்கள் யாவையும் துடைத்தொழிக்கும் முருகா
வண்ணமாய் வாழ்வமைய உனை வேண்டுகிறோம் வரம் தா
பரம்பொருளே உன் புகழ் பாடியே நிற்கும் இத்தரணியே
அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே.

சிங்கைக் கடல் நோக்கி சிரித்து நிற்கும் எங்கள் வேலாயுதனே
பாங்குடனே பவனி வரும் தைப்பூசத் தேனமுதனே
மதியும் தருவாய் நிம்மதியும் தருவாய் இம்மண்ணிலே
அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே.

தமிழ் சொற்களால் கோர்த்துப் படைக்கிறோம் பல பாடல்களை
பழமுதிர் முருகனருளால் சேர்ந்தே அடைவோம் மேன்மையை
என்றும் வழி நடத்திச் செல்லும் எங்கள் துணையே
அருள் புரிவாய் எங்கள் தெண்டாயுதபாணியே.

**சி.நடராஜன்,** (Y0137)

# தலைவர் உரை

அன்புள்ளம் கொண்ட அனைத்து நகரத்தார் பெருமக்களுக்கும் எனது பணிவான வணக்கத்தையும் புத்தாண்டு மற்றும் பொங்கல் வாழ்த்துக்களையும் தெரிவித்துக்கொள்கின்றேன். இந்த 2007 ஆம் ஆண்டு நம் அனைவருக்கும் சிறப்பான ஆண்டாக அமையவும் அனைத்து செல்வங்களும் நம்மை வந்து சேரவும் எல்லாம் வல்ல கற்பக விநாயகரின் பொற்பாதங்களை போற்றி வணங்குகின்றேன்.

இந்த 2007 ஆண்டிற்கான நமது சங்கத்தின் நிர்வாக குழுவின் தலைவராக என்னை தேர்ந்தெடுத்ததற்கு மிக்க நன்றி. இது போல நிர்வாக குழுவின் மற்ற அங்கத்தினரையும் தேர்ந்தெடுத்ததற்கு நிர்வாக குழுவினரின் சார்பாக நன்றிகளை தெரிவித்துக்கொள்வதோடு உங்களின் சார்பாக அவர்களுக்கு வாழ்த்துக்களை தெரிவித்துக்கொள்கின்றேன்.

எங்களால் இயன்றவரை சங்க நிகழ்ச்சிகளை சிறப்பான முறையில் நிகழ்த்த எண்ணியுள்ளோம். அதற்கு உங்களின் மேலான ஆதரவையும் ஒத்துழைப்பையும் நல்க வேண்டுகின்றோம். இந்த ஆண்டு சங்க நிர்வாக குழுவில் புதிய உறுப்பினர்களாக 13 உறுப்பினர்களை தேர்வு செய்துள்ளோம். அவர்களுக்கும் இந்த அனுபவம் புதுமையாகவும் பயனுள்ளதாகவும் அமையும் என்று நம்புகின்றேன்.

சென்ற 2006 ஆம் ஆண்டு நமது சங்கத்தின் நிர்வாக குழு தலைவராக மிகவும் சிறப்பாக பணியாற்றிய திரு அரு. ராமசாமி, மற்றும் நிர்வாக குழுவினருக்கு நமது நன்றியையும் பாராட்டுக்களையும் தெரிவித்துக்கொள்வோம்.

இந்த 2007 ஆண்டிற்கான அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் அறங்காவலராக முன்மொழியப்பட்டிருக்கும் டாக்டர் க.வெள்ளையப்பன் செட்டியார் அவர்களுக்கு நமது வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதோடு சங்க நிகழ்ச்சிகளுக்கு ஆதரவு தரவேணுமாய் அவரையும் கோயில் நிர்வாகக்குழுவினரையும் தாழ்மையுடன் கேட்டுக்கொள்கின்றேன்.

நமது சங்கத்தில் வருடாந்தர சந்தா ஆண்டுக்காண்டு குறைந்துகொண்டே வருகிறது. இதற்கு பல காரணங்கள் இருக்கின்றன. அதனைப்பற்றி நமது ஆண்டுப்பொதுக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது, பலரும் வருமானத்தை பெருக்குவதற்கும் செலவுகளை குறைப்பதற்கும் பல யோசனைகளை கூறினார்கள். முடிவில் கோயில் நிர்வாக குழுவினரிடம் பால்பாக்கெட் போன்ற பொருட்களை கோயிலில் விற்பதற்கு அனுமதி அளிக்க ஒரு கோரிக்கையை சமர்ப்பிக்க அனுமதி வழங்கப்பட்டது.

20.01.2007 அன்று நடந்த நகர கூட்டத்தில், இந்த கோரிக்கையை சமர்ப்பித்ததில், நமது நகரத்தார் சங்கம் வருகிற தைப்பூச திருவிழாவிலிருந்து தொடர்ந்து எல்லா வைபவங்களுக்கும் பால்பாக்கெட் விற்பதற்கும், மேலும் தைப்பூச முடிக்காணிக்கை செலுத்தும் பக்தர்கள் அணிந்துகொள்ள தொப்பிகளை விற்பதற்கும் சம்மதம் தெரிவித்துள்ளார்கள். இந்த ஏற்பாடுகளினால் நமது சங்கத்திற்கு தொடர்ந்து வருமானம் வருவதற்கு அதிக வாய்ப்புள்ளது. இதற்கு சம்மதம் தெரிவித்து ஒருமனதாக இசைந்துள்ள அனைத்து நகரத்தார்களுக்கும், குறிப்பாக கோயில் நிர்வாக குழுவின் தலைவரான டாக்டர் ச. வயிரவன் செட்டியார் அவர்களுக்கும் மற்ற நிர்வாக குழுவினருக்கும் நமது நன்றி கலந்த வணக்கத்தையும் உங்களின் சார்பாக தெரிவித்துக்கொள்கின்றேன்.

“ஆலயம் தொழுவது சாலமும் நன்று” என்ற முதுமொழிக்கேற்ப நமது முன்னோர்கள் கடல் தாண்டி சென்ற இடமெல்லாம் ஆலயங்களை நிறுவி, கோயில் திருப்பணி ஆற்றி, பராமரித்து வந்திருக்கிருக்கின்றார்கள். அந்த வகையில் நமது சிங்கப்பூரிலும், நமது முன்னோர்கள், ஸ்ரீ லயன் சித்தி வினாயகர் கோயில், ஸ்ரீ தெண்டாயுதபாணி கோயில்களை எழுப்பி திருப்பணி ஆற்றி வந்திருக்கிறார்கள். தன்னலமற்ற அவர்களின் சேவை போற்றத்தக்கது மட்டுமன்றி நமது சமூகத்தின் அடையாளாமாகவே திகழ்கின்றது. அவ்வழியில் வந்த நாமும் நம்மால் இயன்றவரை ஆலய பணிகளில் ஈடுபட்டு, ஆலயம் சிறப்பான முறையில் இயங்க நம்முடைய பங்கினையாற்றிவருகின்றோம். இந்த பணிகள் தொடரவும் மேலும் புதியவர்கள் இதுபோன்ற ஆலய பணிகளில் ஈடுபட முன் வரவேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றேன்.

“ஊர் கூடி தேர் இழுப்பது” என்பது மரபு. இதன் அடிப்படையில், நாம் அனைவரும் ஒன்றுகூடி செயல்பட்டால் தொடர்ந்து நமது சமூகம் மேம்பட அதிக வாய்ப்புள்ளது. நமக்குள்ளே உள்ள வேற்றுமைகளை தவிர்த்து, ஒற்றுமையாக செயல்பட்டால் நமது இலக்குகளை எளிதாக சென்றடையலாம் என்ற கருத்தினை வலியுறுத்தி உங்கள் அனைவரின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் எங்களுக்கு அளிக்க வேண்டும் என்று கூறி நிறைவு செய்கின்றேன்.

நன்றி வணக்கம்.

**திரு.இராம.முத்தையா,**
**தலைவர்**
(Y0108)



# ஆசிரியர் உரை

நகரத்தார் பெருமக்களுக்கு என் பணிவான வணக்கங்கள்.பூத்திருக்கும் புத்தாண்டு நம் அனைவருக்கும் சிறப்பாக அமைய அருள்மிகு தெண்டாயுதபாணியை வேண்டி வணங்குகிறேன்.கடந்த ஆண்டின் அனைத்து நிகழ்ச்சிகளையும் திறம்பட நடத்திய நிர்வாக குழுவினருக்கு எங்களின் பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

இவ்வுரையின் மூலம் இரண்டு கருத்துக்களை உங்களுடன் பகிர்ந்து கொள்ள விழைகிறேன்.ஒன்று பிள்ளைகளின் ஆர்வத்தைப் பற்றியது. மற்றொன்று அவர்கள் தங்களின் நேரத்தை பயன்படுத்தும் முறை பற்றியது.

" எய்தற்கு அரியது இயைந்தக்கால் அந்நிலையே
செய்தற்கு அரிய செயல்."

இக்குறள் விளக்கம் யாதெனில் ஒருவருக்கு சாதனை செய்ய வேண்டும் என்னும் ஆர்வம் இருந்தால் அதற்கு தகுந்தபடி நேரத்தை வகுத்தல் வேண்டும். ஏற்ற காலம் வரும் வேளையில் அதை சிறப்பாகப் பயன்படுத்தி, செய்ய வேண்டிய கடமைகளை தன்னம்பிக்கையுடன் செய்தால் வெற்றி உறுதியாகும்.

இக்குறளை மேற்கோள் காட்டி நம் குழந்தைகளிடையே தன்னம்பிக்கை என்னும் ஒப்பில்லாத குணத்தை நாம் வளர்க்க வேண்டும். பிள்ளைகளுக்கு ஓவியம் வரைவது, சதுரங்கம் விளையாடுவது , வினாடி வினா நிகழ்ச்சிகளில் கலந்து கொள்வது, கட்டுரை எழுதுவது போன்ற ஏதேனும் ஒரு விஷயத்தில் ஆர்வம் இருக்கும். ஆர்வத்தோடு அதைச் செய்யும்போது, பிள்ளைகள் படிக்கும் நேரத்தை வீணாக்குவதாக எண்ணாமல் அவர்களை ஊக்கப்படுத்தி உதவி புரிந்தோமேயானால் , உரிய காலத்தில் நம் பிள்ளைகள் சாதனையாளர்களாக சிறப்பு அடைவார்கள்.

மற்றொரு கருத்து, நேரத்தை பயன்படுத்தும் முறை பற்றியது. போட்டித்திறன் மிகுந்த இந்தக் காலக்கட்டத்தில் நம் பிள்ளைகள் சிறப்பாக தேர்வு பெற வேண்டும் என்ற எண்ணத்தில் அவர்களின் வேலைப் பளுவை சற்று அதிகமாகவே நாம் கூட்டி

விடுகிறோம்.இதனால் சில நேரங்களில் குழந்தைகளுக்கு படிப்பில் பிடிப்புத் தன்மை குறைந்து போகும் வாய்ப்பு உள்ளது. இதனால் குழந்தைகள் படிக்கும் நேரங்களில் முழு கவனமின்றி விளையாட்டுத்தனமாகவும், விளையாட வேண்டிய நேரங்களில் படிப்பைப் பற்றிய பயத்துடனும் இருப்பதற்கான வாய்ப்புகள் அதிகம். இதற்கு நல்லதொரு தீர்வாக , குழந்தைகளிடம் ஒரு குறிப்பேட்டில் அவர்கள் எந்த நேரம் படிக்க வேண்டும் , எவ்வளவு படிக்க வேண்டும் , அதே போன்று எந்த நேரம், எவ்வளவு நேரம் விளையாடலாம் என்பதைப் பெற்றோர் எழுதிக் கொடுத்துவிட்டு அதைக் கடைபிடிக்க வைத்தால், பிள்ளைகளிடம் நல்ல மாற்றம் உண்டாகும்.

பின்னர் அவர்கள் வளர வளர அவர்களே இத்தகைய “நேரம் திட்டமிடுதலை” பழக்கமாக்கிக் கொள்வார்கள். தேர்வுக்காலங்களில் மட்டும் கூடுதலான நேரத்தைப் படிப்பதற்கு செலவழிக்க அறிவுறுத்தலாம். விளையாடுவதற்கு நீண்ட விடுமுறை தான் தேர்வுக்குப் பின்னர் வருகிறதே!

வரும் மாதங்களில் நடைபெறப் போகும் அனைத்து நிகழ்ச்சிகளும் இனிதாக அரங்கேற தங்களின் மேலான ஒத்துழைப்பையும் ஆதரவையும் வேண்டி, நிறைவு செய்கிறேன். நன்றி.

**சி. நடராஜன் ஆசிரியர்**
(Y0137)

# நிறைவேறிய நிகழ்ச்சிகள்

பிள்ளையார் நோன்பு (25.12.2006)

ஆண்டுதோறும் சிறப்பாக நடைபெறும் பிள்ளையார் நோன்பு, சென்ற ஆண்டு 25.12.2006 திங்கட்கிழமை மாலை அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் செட்டியார் திருமண மண்டபத்தில் சிறப்பாக நடைபெற்றது. அதில் பெரியவர், சிறியவர் என சுமார் 960 இழைகள் எடுத்துக் கொள்ளப்பட்டது, அனைவரையும் ஓரே இடத்தில் பார்த்து பேசிய மகிழ்ச்சியோடு பிள்ளையார் நோன்பு சிறப்பாக நடைபெற்றது.

தொண்டர்குழு உபயம்: (01.01.2007)

வழக்கம்போல் 01.01.2007 அன்று தொண்டர்குழு உபயம் சிறப்பாக நடைபெற்றது. மாலை 7 மணி அளவில் தீப ஆராதனையை தொடர்ந்து அருட்கடவுள் அருள்மிகு தெண்டாயுதபாணி கோயிலை வலம் வந்து பக்தர்கள் அருள் பெற்றனர். தொடர்ந்து தொண்டர்குழு உபய விருந்து மிகச்சிறப்பாக நடைபெற்றது. தொண்டர்குழுவின் தன்னலம் கருதாத சேவை தொடர்ந்து நடைபெற இறைவன் அருள் புரிய வேண்டி அவர்களை மனதார வாழ்த்தி பாராட்டுகிறோம்.

வருடாந்திர பொதுக் கூட்டம்: (07.01.2007)

அருள்மிகு தெண்டாயுதபாணி கோயில் செட்டியார் திருமண மண்டபத்தில் (07.01.2007), ஞாயிற்றுக்கிழமை மாலை 4.00 மணி அளவில் நம் சங்கத்தின் ஆண்டுப் பொதுக்கூட்டம் சென்ற ஆண்டுத் தலைவர் திரு. அரு. இராமசாமி அவர்கள் தலைமையில் சிறப்பாக நடைபெற்றது. தலைமை உரை மற்றும் வருடாந்திர கணக்கு வாசித்தற்குப் பிறகு, திரு PK.செட்டி அவர்கள் மற்றும் திரு VR.அழகப்பன் அவர்கள் தேர்தல் அதிகாரிகளாகப் பணியாற்றி இந்த ஆண்டிற்கான நிர்வாகக் குழுவைத் தேர்ந்தெடுத்தார்கள்.
பொதுக்கூட்டத்தில் ஏக மனதாக தேர்ந்தெடுக்கப்பட்ட இந்த ஆண்டின் நிர்வாகக்குழு உறுப்பினர்கள் பின் வருமாறு:

| | |
|---|---|
| தலைவர் | திரு. RM. முத்தையா |
| உபதலைவர் | திரு. S. சிவலிங்கம் |
| செயலாளர் | திரு. C. கண்ணன் |
| உதவிச் செயலாளர் | திரு. A. சரவணண் |
| பொருளாளர் | திரு. RM. பெரியகருப்பன் |
| உதவிப் பொருளாளர் | திரு. C. சீதாராமன் |

செயற்குழு உறுப்பினர்கள்

| | |
|---|---|
| திரு. V. சின்னையா | திரு. S. வெங்கடாசலம் |
| திரு. K. கார்த்திக் | திரு. SM. நாச்சியப்பன் |
| திரு. C. நடராஜன் | திரு. PL. சபாபதி |
| திரு. S. பழநியப்பன் | திரு. M. வெங்கடாசலம் |
| திரு. C. செந்தில் | திரு. M. அழகப்பன் |
| திரு. E. சோமசுந்தரம் | திரு. S. இராமசாமி |
| திரு. VL. சோமசுந்தரம் | திரு. N. சேகர் |
| திரு. S. இராமநாதன் | |

| | |
|---|---|
| ஒத்துழைப்பு உறுப்பினர்கள்: | உட்-தணிக்கையாளர்கள் |
| திரு. AR. இராமசாமி | திரு. S. நடராஜன் |
| திரு. KN. முத்துகணபதி | திரு. S. காசி |

கிட்டங்கி தகவல் தளக்குழு:

கிட்டங்கி No. 1 திரு. C. நடராஜன்
கிட்டங்கி No. 1A திரு. E. சோமசுந்தரம்
கிட்டங்கி No. 1B திரு. S. வெங்கடாசலம்
கிட்டங்கி No. 9 திரு. SM. நாச்சியப்பன்
கிட்டங்கி No. 15 திரு. S. இராமசாமி

| | |
|---|---|
| செய்திக் கடிதக்குழு: | வர்த்தக சபை உறுப்பினர்கள்: |
| திரு. C. நடராஜன் | திரு. S. சிவலிங்கம் |
| திரு. SM. நாச்சியப்பன் | திரு. AR. இராமசாமி |
| திரு. V. சின்னையா | |
| திரு. K. கார்த்திக் | |
| திருமதி. முத்து சின்னையா | |

கோயில் நிர்வாக குழுவின் கிட்டங்கி பிரதிநிதிகள்:

கிட்டங்கி No. 1 திரு. S. சிவலிங்கம்
கிட்டங்கி No. 1A திரு. S. பழநியப்பன்
கிட்டங்கி No. 1B திரு. C. கண்ணன்
கிட்டங்கி No. 9 திரு. RM. முத்தையா
கிட்டங்கி No. 15 திரு. S. இராமசாமி

## தைப்பொங்கல் (15.01.2007)

தமிழர் திருநாளாம் பொங்கல் திருநாள் விய ஆண்டு தைத் திங்கள் முதல் தேதி (15.01.2007) அன்று கொண்டாடப்பட்டது. இந்த ஆண்டும் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயில் நிர்வாகக் குழுவின் ஏற்பாட்டில் பொங்கல் காய்கறிகள் வரவழைக்கப்பட்டன. பொங்கலுக்கு முதல் நாள் (14.01.2007) ஞாயிற்றுக்கிழமை மாலை 5.00 மணி அளவில் மன்ற நிர்வாகக் குழுவின் உதவியுடன் நமது நகரத்தார்களுக்கு பொங்கல் காய்கறிகள் வழங்கப்பட்டது. மறுநாள் (15.01.2007) திங்கட்கிழமை காலை 6.15 மணி அளவில் லயன் சித்தி விநாயகர் கோயிலில் பொங்கல் வைத்து, காலை 7.45 மணிக்கு தீப ஆராதனை நடைபெற்றது. அதன் பிறகு 7.00 மணி அளவில் அருள்மிகு தெண்டாயுதபாணி திருக்கோயில் பொங்கல் வைத்து, காலை 8.30 மணிக்கு தீப ஆராதனை நடைபெற்றது. ஆச்சிமார்களின் கைவண்ணத்தில் உருவான வண்ணக்கோலங்கள் நம் செட்டிநாட்டின் பாரம்பரியத்தினைப் பிரதிபலித்து, திருக்கோயிலின் அழகிற்கு மேலும் மெருகூட்டியது

# நடைபெறப்போகும் நிகழ்ச்சிகள்

விய வருடம் தைத்திங்கள் 14ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை (28.01.2007) காலை 10.05 மணிக்கு மேல் 10.25க்குள் தைப்பூச முகூர்த்தக்கால் நடுதல், காலை 10.30 மணிக்கு மேல் 10.47க்குள் தைப்பூச காவடி கொடுத்தல், மதியம் 12.05 மணிக்கு மேல் 12.30க்குள் ரத வெள்ளோட்டம்.

<u>புனர் பூசம்</u>

விய வருடம் தைத்திங்கள் 17ஆம் தேதி புதன் கிழமை (31.01.2007) காலை 04.00 மணிக்கு விஷேட தீபாராதனை, காலை 05.00 மணிக்கு ரதத்திற்கு சுவாமி வந்து சேர்ந்து பிள்ளையார் கோயிலுக்கு புறப்பாடு, மாலை 02.45 மணிக்கு காவடிப் பொங்கல், மாலை 05.00 மணிக்கு மேல் 06.00க்குள் ரதம் பிள்ளையார் கோவிலிருந்து புறப்படுதல்

<u>தைப்பூசம்</u>

விய வருடம் தைத்திங்கள் 18ஆம் தேதி வியாழக்கிழமை (01.02.2007) காலை 02.45 மணிக்கு விநாயகர் பொங்கல் வைத்தல் தொடர்ந்து அன்னக் கொடி ஏற்றுதல். விநாயகர் பானை வைத்தல்.

<u>ஏலம்</u>

தைப்பூசத்திற்கு மறுநாள் 02.02.2007 வெள்ளிக்கிழமை அன்று மாலை 05.00 மணிக்கு ஏலம்.

<u>மகமைக் கூட்டம்</u>

தைப்பூசத்திற்கு மறுநாள் 02.02.2007 வெள்ளிக்கிழமை அன்று இரவு மகமைக் கூட்டம் நடைபெற உள்ளது.

2006ஆம் ஆண்டு செட்டியார் கோவில் குழுமத்தின் தலைவராக (கார்பார்) டாக்டர் திரு.வயி.ச.வயிரவன் செட்டியார் அவர்களுக்கு நம் சங்கத்தின் நெஞ்சார்ந்த நன்றிகளையும் பாரட்டுக்களையும் தெரிவித்துக் கொள்கிறோம். 2007 புதிய கார்பாராக முன்மொழியப்பட்டிருக்கும்

டாக்டர் திரு. க.வெள்ளையப்பன் செட்டியார் அவர்களுக்கு சங்கத்தின் சார்பாக வாழ்த்துக்களையும் ஆதரவையும் தெரிவித்துக் கொள்கிறோம்.

## FUNFAIR DAY (கேளிக்கை தினம்)

நமது செட்டியார் திருமண மண்டபத்தில், எதிர்வரும் மார்ச் 11 அன்று காலை 10 முதல் மாலை 6 மணி வரை FUNFAIR DAY(கேளிக்கை தினம்) நடைபெற உள்ளது. இதில் குழந்தைகளுக்கு பல்வேறு சுவையான விளையாட்டுக்கள், மாயாஜால நிகழ்ச்சி, இளைஞர்களுக்கான தமிழ் கரோக்கி பாடல்கள் மற்றும் நகைச்சுவை மேளா நிகழ்ச்சிகள் ஆகியவை நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சிகளில் பங்கு பெற விரும்புவோர் கீழ்கண்ட நபர்களிடம் விபரங்களை பிப்ரவரி 25க்குள் கொடுக்குமாறு கேட்டுக் கொள்கிறோம்.

கரோக்கீ மற்றும் நகைச்சுவை மேளா நிகழ்ச்சியில் 16 வயதுக்கு மேற்பட்டோர் கலந்து கொள்ளலாம். கரோக்கி நிகழ்ச்சியில் பாட விரும்புவோர் சிடி வட்டுக்களை அவரவர்களே எடுத்து வருமாறு வேண்டுகிறோம். நீங்கள் தேர்வு செய்யும் பாடல்கள் 5 நிமிடங்களுக்குள் இருக்குமாறு பார்த்துக் கொள்ளவும் . முதலில் வருவோருக்கே முதல் வாய்ப்பு என்ற முறையில் பதிவு செய்யப்படும்.

விபரங்கள் கொடுக்க அணுகவும்:

| | |
|---|---|
| திருமதி. தமிழ்செல்வி இராமசாமி | 62657274 |
| திருமதி. ருக்மணி சோமசுந்தரம் | 68929246 |
| திருமதி. மீனாள் கார்த்திக் | 65603815 |
| திருமதி. மீனாக்ஷி நாச்சியப்பன் | 66188608 |

## உல்லாசப் பயணம் (21-04-07 மாலை , 22-04-07)

இனியதொரு உல்லாசப் பயணம் எதிர் வரும் ஏப்ரல் 21,22 ஆகிய தேதிகளில் Aloha Changi Resort ல் நடைபெற உள்ளது. இந்த நிகழ்ச்சி பற்றிய முழு விபரங்கள் அடுத்த செய்திக் கடிதத்தில் வெளியிடப்படும்.

## ஆச்சிமார் உபயம்

ஆச்சிமார் உபயம் மே 1 வழக்கம் போல் சிறப்பாக நடைபெற உள்ளது. திருமதி.முத்து சின்னையா அவர்களிடம் உபயத்திற்கான $10 வெள்ளியை கொடுக்கலாம் என்று தெரிவித்துக் கொள்கிறோம்.

# நகரத்தார் பக்கம்

## ஆன்மீகம்

அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது என்ற ஔவையாரின் முதுமொழிக்கு ஏற்ப மானிடர்களாய்ப் பிறந்து வாழும் நாம் அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு மறைகளை வாழ்க்கை நெறியாக்கிகொண்டு வாழ வேண்டும்.

அறம் செய்ய விரும்பி, அறம் செய்து, அறவழிகளில் பொருள் ஈட்டி, உலக இன்பங்களை எல்லாம் துய்த்து, கடைசியில் இறைவனின் திருவடியாகிய வீட்டினை எட்டி சிக்கெனப்பிடிக்க வேண்டும். இப்படி நான்மறை வாழ்க்கையை மனநிறைவோடு நாம் வாழ நமக்கு உறுதுணையாய் இருப்பது நம்முடைய தொன்மையான சைவ சமயம்.

நம் முன்னோர்களான செந்தமிழ் மக்கள் சைவ நெறிகளை வகுத்து, அவற்றை நம் தமிழ் மொழியோடு இணைத்து நமக்காக விட்டுச்சென்று இருக்கிறார்கள்.

சைவத்துக்கு அடிப்படையாக, முடிந்த முடிவாக இருப்பது சிவம்.

சிவத்துக்குத் துணையாக, இணையாகச் சக்தி. சிவமும் சக்தியும் சேர்ந்து சிவ குடும்பம் என்று வகுக்கப்பட்டு இருக்கிறது.

குடும்ப வாழ்க்கையை வலியுறுத்தி நம் முன்னோர்கள் நமக்கு விட்டுச்சென்றிருக்கும் வாழ்வுமுறை, உலகில் வேறு எந்த இன, சமய, குல மரபுகளிலும் காணப்படாத ஒன்றாக இருக்கிறது.

தகவல் தொழில்நுட்பம், உலக மயம் என்று உலகம் சுருங்கிவிட்ட, பரபரப்பான இந்தக் கால கட்டத்திலும், வாழ்க்கை மனநிறைவாக

அமைய வேண்டுமெனில் வெறும் லௌகீக இன்பங்களை மட்டும் விரும்பாமல், மக்கள், குறிப்பாக இளையர்கள் சைவத்தையும் தமிழையும் தங்கள் வழித்துணையாகக் கொண்டு வாழ்வில் 16ம் பெற்று பெருவாழ்வு வாழ வேண்டும்; வாழ்வார்கள் என்று நம்புவோம்.

திருமதி முத்து சின்னையா
(Y0041)

<u>மகான்களின் மணிமொழிகள்</u>

1. உள்ளொன்று புறமொன்று இல்லாது இருந்தாலன்றி களங்கமற்ற நேர்மை இருந்தாலன்றிக் கடவுளை அறிந்துணர முடியாது.
   --- இராமகிருஷ்ணர்
2. உறுதியும், ஊக்கமும் , உழைப்பும் இளமையைப் பாதுகாக்கின்றன
   --- தாயுமானஸ்வாமிகள்

**தொகுப்பு : மீனாள் கார்த்திக்.**
(Y0058)

# தாலாட்டு

ஆராரோ ஆரிரரோ
ஆராரோ ஆரிரரோ
கண்ணான கண்ணுமணி
நீ கை நிறைந்த பொன்னுமணி
எண்ணாத சின்னுமணி
நீ ஏன் அழுதாய் சொல்லுமணி
யார்யாரோ நிற்கையிலே கண்ணே
என்னை பார்த்து ஏன் அழுதாய்
பேர் கேட்டு நிற்கையிலே கண்ணே
பேசாமல் ஏன் அழுதாய்
திருவெற்றியூரில் அழுகின்றாய்
நீ ஓயாமல் அழுகின்றாய்
துயர்துடைக்க நான் இருக்கேன்
எந்த ஊரு சொல்லிவிடு கண்ணே
உன்னை எப்படியும் சேர்த்திடுவேன்
குழந்தை அங்கு யார் இருக்கா
பாட்டுக்குள்ளே ஊர் இருக்கே கண்ணே
பாட்டிலிலே பால் இருக்கே
குடி என்றா ஊர் இருக்கும் கண்ணே
குடியதுவும் ஆரிருக்கே

அரியக்குடி, ஆத்தங்குடி கண்ணே
ஆளவந்த காரைக்குடி
பனங்குடி, பலவான்குடி கண்ணே
கீழ ஒரு பூங்குடியாம்
எந்த குடி உந்தன் குடி என் கண்ணே
நீயும் கொஞ்சம் பாலைக்குடி
மாமன்குடி எந்தக் குடி மயிலே
மன்னின் குருவுக்கு ஆலங்குடி அவர்
மகிமையை நீயும் தெரிஞ்சுக்கடி.

ஊர் என்றா ஊர் இருக்கும் கண்ணே
அந்த ஊரை சொல்லிவிடு
அழுகை கொஞ்சம் நிறுத்திவிடு
ஊரெல்லாம் சொல்லுகிறேன் அதை
உந்தன் காதில் போட்டுகிட்டு
யாரெல்லாம் அங்கு சொந்தமென்று அவர்
பேரையெல்லாம் சொல்லிக்காட்டு

நகரத்தார் ஊர் நமக்கு கண்ணே
நல்லதொரு கொட்டகையாம்.
ஏனோ சில மறைஞ்சிருச்சு
எல்லா ஊருக்கும் கூட்டிப்போறேன் கண்ணே
எல்லையெல்லாம் காட்டுகிறேன்
கோட்டை என்றா ஊர் இருக்கும் கண்ணே

கோட்டை என்றால் மூன்றிருக்கே
நாட்டரசன் கோட்டை ஒன்று நல்ல
கண்ணாத்தாள் சாமி உண்டு
அலவாக் கோட்டை, தேவகோட்டை
அதிலெந்தக் கோட்டை உந்தன் கோட்டை
கோட்டைக்குள்ளே ஊர் இருக்கா
நாச்சியாபுரம் அதுவா
நல்ல நடராசபுரம் அதுவா
நாச்சியம்மா அங்கிருக்கா நமக்கு
நல்லதெல்லாம் செஞ்சிருக்கா
சொக்கநாதபுரம் அதுவா இரண்டும்
லட்சுமிபுரம் அதுவா சோழபுரம் அதுவா
சோலைக்கிளி உன் ஊர் அதுவா
பட்டி என்றா ஊர் இருக்கும் கண்ணே
பட்டி என்றால் மூவேலிருக்கே
வேகுப்பட்டி, கல்லுப்பட்டி - நெய்நந்தி
வேந்தம்பட்டி, நச்சாந்துப்பட்டி,
வலையபட்டி, கடியாபட்டி
கம்மா ஊருக்குள்ளே பத்து இருக்கே
கண்டனூரா, பள்ளத்தூரா, கண்ணே
கான்வென்ட் கோட்டையூரா?
அது அல்ல வெற்றியூரா.

(தொடரும்)

- திருமதி செல்லப்பன் சிவகாமி
(நீலா) Y0282

<u>ஒரு சுற்றுலா பயணம்</u>

ஹோ ச்சீ மின் நகரம், வியட்நாம் - நேற்றைய சைகோன்



அப்பத்தா, ஆயா சொன்ன கதைகளில் ஒன்றான சைகோன் கதை, சிறுவயது முதல் என்னை ஈர்த்தது. அக்காலத்தில் அரிசிச் சோலை என்று பெயர் போன இடங்களாக ரங்கூன் மற்றும் சைகோன் விளங்கியதாகவும், அங்கு நம் நகரத்தார்கள் செல்வச் செழிப்புடன் வாழ்ந்ததை கேள்விப்படும்பொழுது, நானும் ஒரு நகரத்தார் என்பதை நினைத்து பெருமைப்பட்டுக்கொண்டேன். சைகோன் நகரம் தென்வியட்நாமில் உள்ளது. செட்டியார் கோயில்கள் மற்றும் வரலாற்றை தெரிந்து கொள்கின்ற ஆர்வத்துடன் என் பயணத்தை துவக்கினேன்.

<u>வெள்ளிக்கிழமை (நாள் 1):</u>

முதலில் 66 Ton That Theip அமைந்திருக்கும் நம் கோவிலுக்குச் சென்றேன். அங்கு முதலில் என் கண்களுக்குத் தென்பட்ட அந்த அழகிய கோபுரம் என்னை வரவேற்றது. அந்த அழகிய கோயில்தான் அருள் மிகு தண்டாயுதபாணி கோயில். நகரத்தார்களால் கட்டப்பட்டு அவர்களால் பாதுகாக்கப்பட்ட அற்புதமான அந்தக் கோயில், என்னை மிகவும் கவர்ந்தது. 4 வாகனங்கள், விழாக்காலங்களில் சுவாமிகளை கொண்டு செல்வதற்காக செய்யப்பட்ட அந்த வாகனத்தில் மஞ்சள் மாடு, ஆடிக்கொண்டிருக்கும் சிகப்பு குதிரை, ஆடு மற்றும் இடும்பன் உள்ளனர். கோயில் பிரகாரங்கள் கோயிலுக்கு உள்ளேயும், வெளியேயும் சுற்றி வர பாதைகள் உள்ளன.

அடுத்து 98, Nam Ky Khor Nglina Street, District 1-ல் உள்ள சுப்ரமணியன் கோயிலை பார்ப்பதற்காகச் சென்றேன். இந்தக் கோயிலில் மிக முக்கியமான விஷயம் என்றால், நவகிரகங்கள் கோயிலின் வலது பக்கம் டைல்ஸ் பதிக்கப்பட்ட மேடையில் அமைந்துள்ளது. 9 கிரகங்களும், 9 வர்ண பட்டு ஆடைகள் அணிந்துள்ளனர். பூக்கள் மற்றும் ஊதுபத்திகள் போர்சிலேயின் ஜாடியில் வைக்கப்படுகிறது. சிவன், முருகன், லட்சுமி, சரஸ்வதி மற்றும் கிருஷ்ணரின் படங்கள் கோயிலில் வைத்து கும்பிடப்படுகின்றனர்.

அன்று மாலை நான் 45 D Truong Dinh-லுள்ள மாரியம்மன் இந்து கோயிலுக்குச் சென்றேன். ஹோ ச்சீ மின் நகரத்திலேயே இந்த ஒரு கோயிலுக்குத்தான் பொருளாதார உதவி கிடைக்கப்படுகிறது. இக்கோயில் வியட்நாமீஸ் மொழியில் Chua Ba மாரியம்மன் என்று அழைக்கப்படுகிறது. சீனர்கள் மற்றும் வியட்நாமீஸ் அனைவரும் இந்த அம்மனை மிகவும் பக்தியுடன் கும்பிடுகின்றனர். நிஜமாகவே இந்த மாரியம்மன் ஒரு சக்தியான அம்மன். இக்கோயில் 19ஆம் நூற்றாண்டின் இறுதியில் கட்டப்பட்டது.

1975ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்தில் நடந்த Reunification-ற்க்குப் பிறகு, அரசாங்கம் இக்கோயிலை எடுத்துக்கொண்டு அதில் ஒரு பகுதியை ஊதுபத்திகள் தயாரிக்கும் இடமாகவும், மற்றொரு பகுதியை கடல்வாழ் உயிரினங்களை ஏற்றுமதி செய்யுமிடமாகவும் இக்கோயிலை மாற்றியதாம். கோயிலின் கோபுரத்தின்கிழ் இக்கடல்வாழ் உயிரினங்களை வெய்யிலில் காயவைப்பார்களாம். இவ்வாறு அங்குள்ளவர்கள் என்னிடம் கூறியதைக் கேட்டு, எனக்கு கண்ணீர் வந்தது.

சாமியைக் கும்பிட்டு அங்கு பிரபலமாக இருக்கும் வியட்நாம் காபியைக் குடிக்கச் சென்றேன். பில்ட்டர் காபி குடிப்பதுப் போன்றிருந்தது. நமது முன் காபி பில்ட்டரை வைத்து தயாரிக்கின்றனர். அந்த பில்ட்டரை ஒரு ஞாபகார்த்தமாக அனைவரும் வாங்குகின்றனர். அருமையாக இருக்கும் அந்த காபி பவுடரையும் நாம் வாங்கிக்கொண்டு வந்தால் வியட்னாம் காபியை நம் வீட்டில் நாமே தயாரிக்கலாம். காபி பவுடர் வாங்குவதற்க்காகவே வியட்னாம் செல்லலாம், அவ்வளவு அருமையான காபி அது. என்ன சுவை!

<u>சனிக்கிழமை (நாள் 2):</u>

காலை 8 மணி அளவில், நான் தங்கும் இடத்திலிருந்து புறப்பட்டு, அமெரிக்க- வியட்நாம் போரின் போது பிரபலமடைந்த, 200 கி.மீ நீளமுள்ள பாதாள சுரங்கப் பாதையைக் காணச்சென்றேன். இந்தச் சுரங்கப் பாதையில் தங்குவதற்கான வசதி, ஆயுதக் கிடங்கு, மருத்துவ வசதி மற்றும் வியட்நாம் போராளிகளின் தலைமையிடம் இங்குதான் இருந்தது.

கெள தய் பிரிவினர் (Cao Dai Sect) என்ற புதிய மதத்தின் மத்திய வேலை பூசையைக் காண Tay Ninh ற்க்கு விரைந்து சென்றோம். 1923-ல் உருவான இம்மதத்தில் 20 இலட்சம் சங்க உறுப்பினர்கள் உள்ளனர். கெள தய் மதத்தினரின் பூசை, வண்ண ஆடைகளை உடுத்தி, பார்ப்பதற்கே மிக அழகாய் இருந்தது. கன்ஃபூசீயானிசம் (Confucianism), டௌயிசம் (Taoism), புத்த மதம் (Buddhism) ஆகிய மூன்று மதங்களின் கலவையாக உருவானதுதான் இந்த கெள தய் மதம். இவர்களின் கோயில் பார்ப்பதற்கு மிக அற்புதமாகவும், வண்ண மையமாகவும் இருக்கும். இக்கலத்தையும், இவர்களின் பூசையையும் சென்று பார்ப்பதே ஒரு அழகு. அவசியம் பார்க்க வேண்டிய ஒரு இடம் இது.

அங்கிருந்து இரண்டு மணி நேரத்தில் நகரத்தைச் சென்றடைந்தோம். வியட்நாம் போரின் போது அமெரிக்க தூதரகமாக விளங்கிய இடத்தை முதலில் பார்வையிட்டோம். பின்பு Re-unification அரண்மனையைச் சென்றடைந்தோம். இவ்வரண்மனை, ஏப்ரல் 1975ஆம் ஆண்டு வரை தென்வியட்நாமின் முன்னாள் ஜனாதிபதியின் மாளிகையாக விளங்கியது.

இதன் அருகில் சைகோனின் பழமைவாய்ந்த தபால் நிலையம் உள்ளது. இத்தபால் நிலையத்தை அவசியம் சென்று காண வேண்டும். ஏனெனில்,

இது பிரான்சு நாட்டவரின் கலாச்சாரத்தை பறைசாற்றும் கட்டிடமாகும். இதைத் தொடர்ந்து நோட்ர டேம் ஆலயத்திற்குச் (Notre Dame Cathedral) சென்றோம். அதன் பின் வியட்நாம் போரின் நினைவுகளைப் பறைச்சாற்றும் அருங்காட்சியகத்திற்குள் நுழைந்தோம்.

சுமார் 4 மணி அளவில் நகர சுற்றுப்பயணத்தை முடித்துக்கொண்டு, பென் தாண்ஹ் சந்தை (Ben Thanh Market)-க்கு விரைந்தோம். ஏனெனில், இச்சந்தை 7 மணி வரைதான் திறந்திருக்கும். மிகப் பெரிதான இச்சந்தையில், நீங்கள் நினைக்கும் அனைத்தும் விற்பனைக்கு உள்ளது. பெரும்பாலும் சுற்றுலா பயணிகளை குறிவைத்து, விற்பதால் உள்ளூர் மக்களால் இங்கு எதுவும் வாங்க இயலாது.

<u>ஞாயிற்றுக்கிழமை (நாள் 3):</u>

காலை 7.30 மணிக்கு தங்கும் இடத்தில் இருந்து புறப்பட்டோம். அரிசியைக் கொண்டு காகிதம் தயாரிக்கும் தொழில் உட்பட ஏனைய உள்ளூர் குடிசைத் தொழிற்களைப் பற்றி ஆராய முற்பட்டோம். பின்பு உலகில் மிக அகண்ட நதிகளில் ஒன்றான மீக்கோங் (Mekong) நதியை விசைப் படகில் கடந்தோம். நதியின் சிறிய மூலைகளை துடுப்புப் படகு ஒன்றைக் கொண்டு பார்வையிட்டோம்.

பின்பு கைவினைப் பண்ணை ஒன்றைக் காணச் சென்றோம். அங்கு விற்கப்படும் அனைத்துப் பொருட்களும் (தேங்காய் மிட்டாய்கள் உட்பட), தென்னை மரங்களை ஆதாரமாகக் கொண்டதாகும். இங்கு விலை மிகவும் அதிகம். அதன்பிறகு ஒரு தேனி பண்ணைக்குச் சென்றோம். இங்கு விற்கப்படும் தேன் மிக சுத்தமாகவும் இயற்கையானதாகும். சற்றே கூடுதல் விலையாயினும், இதை அவசியம் வாங்க வேண்டும். அதன்பின் Tropical பழங்களை சுவைத்து மகிழ்ந்தோம்.

<u>திங்கட் கிழமை (நாள் 4):</u>
சைகோன் பயணத்தில் இன்றுதான் எங்களின் இறுதிநாள். சைகோனின் அழகிலும் சந்தோஷத்திலும் மூழ்கியிருந்தோம். ஹோட்டலை காலி செய்துவிட்டு, அதிகாலையிலேயே தண்டாயுதபாணி மற்றும் மஹா மாரியம்மன் கோயில்களுக்குச் சென்று இறைவனை வழிப்பட்டோம். இதைத்தொடர்ந்து சிறிது முன்னதாகவேச் சென்று அழகிய வின்ஹ் திராங் பகோடா (Vinh Trang Pagoda)-வை காணச்சென்றோம்.பின் சைகோனில் இருந்து புறப்பட்டு சிங்கப்பூர் வந்து அடைந்தோம். சைகோன் - நினைவில் நீங்காத ஒரு இனிய பயணம். இப்பயணத்தை மீண்டும் மேற்கொள்ள ஆசையாகவும், மிகவும் ஆர்வமாகவும் உள்ளேன்.

அழகப்பன் கருப்பையா
(Y0312)

**கவிதை பக்கம்**

## மாறித்தான் போய்விட்டது வாழ்க்கை!

ஆன்லைனில் ஆண்டவனுக்கு அர்ச்சனை செய்ய முடிகிறது!
ஆனால், நேரில் சென்று கூடி வழிபடுவது குறைந்து போகிறது!
ஓய்வறையிலும் கைத்தொலைபேசியில் கலந்துரையாட முடிகிறது!
ஆனால், எடுத்ததற்கெல்லாம் தொலைபேசி குறுக்கீடுகள் கூடிப்போய் நிம்மதி தொலைகிறது!

வரிசையில் நிற்காமலேயே வங்கிப்பணிகள் சாத்தியம் ஆகிறது!
ஆனால், மறைச்சொற்கள் தான் அடிக்கடி மறந்து தொலைக்கிறது!

கைக்காசு இல்லாமலேயே அட்டையைத் தேய்த்து ஆடம்பரம் வாங்கமுடிகிறது!
ஆனால், பணம் கட்டும்போதுதான் வட்டியும் முதலும் கையைக் கடிக்கிறது!

வீட்டிலிருந்தே அலுவலகப் பணியை ஆற்ற முடிகிறது!
ஆனால், விடுமுறையன்றும் வேலை செய்து வீட்டிலிருந்தே
சின்னத்திரை மூலம் நாட்டு நடப்பை பார்க்க முடிகிறது!
ஆனால், தொடர்ந்து பார்த்து நேரம் தொலைத்து
ஒருவருக்கொருவர் பேசிக்கொள்வது குறைந்து போகிறது!

போகிற இடங்களில் ஏற இறங்க எஸ்கலேட்டர் உதவியாய் இருக்கிறது!
ஆனால், கைகால்களுக்கு இயற்கையான உடற்பயிற்சி கூட இல்லாமல் போகிறது!
வளர்ந்துவரும் அறிவியல் வளர்ச்சி வாழ்க்கைக்கு வசதியைத் தருகிறது
ஆனால், அளவுக்கு மேலே அனுபவிக்கும் வசதியால் ஆனந்தம் குறைகிறது!

**RM.வைரவன்,** (Y0252)

## <u>உண்மையில் பைத்தியங்கள்.</u>

ஆடைகளைக் கிழிப்பதும்
தலைமுடியைக் கலைப்பதும்
சம்பந்தம் இல்லாத செயல்களைச் செய்து
அர்த்தம் இல்லாமல் சிரிப்பதும்
நாக்குப் பிதற்றி உளறுவதும்
நாணமின்றித் திரிந்தலைவதும்
பைத்தியத்தின் செயல்களா
இல்லை.இல்லை.அது
மனம் பாதிக்கப்பட்டு - நிலை
ஊனமாகிப் போன நோயின் அறிகுறி
எதற்கும் உபயோகமின்றி
யாருக்கும் பிரயோசனமின்றி
செய்கின்ற செயல்கள் வீணாக
வாய் விழுங்கி வயிறுவளர்ப்போரே
மெய்யான பைத்தியங்கள்.

**சித.அருணாசலம்,** (Y0029)

## <u>துணுக்குகள்</u>

ஒருவர் : உங்க பையன் கணக்குல புலின்னீங்க ரெண்டும் ரெண்டும் வ்வளவுன்னு கேட்டா பதில் சொல்லாம முழிக்கிறானே !

மற்றொருவர் : நீங்க வேணும்னா ஒரு புலிக் கிட்டேயும் இதே கேள்வியை கேட்டுப் பாருங்க, அதுவும் இப்படித்தான் முழிக்கும்.

---

நண்பன் 1 : போன மாதம் முழுக்க உங்கப்பா கழுதைன்னு சொல்லி திட்டினார், சரி இப்ப என்னடான்னா உன்னை கட்டெறும்புன்னு சொல்லி திட்டுகிறாரே ஏன் அப்படி?

நண்பன் 2 : எங்கப்பா என்னை திட்டுறதை கொஞ்சம் குறைச்சுட்டார். அதான், "கழுதை தேய்ந்து கட்டெறும்பு " ஆச்சுது.

---

முதலாமவர் : டாக்டருக்கு ஒழுங்கா பீஸ் தராததால என்னோட ரெண்டு பல்லை தட்டி எடுத்துட்டார் !

மற்றொருவர் : போனாப் போவுது....... ரெண்டு பல்லு தானே !

முதலாமவர் : அட ! டாக்டர் தட்டி எடுத்தது ரெண்டும் தங்கப் பல்லாச்சே!

டாக்டர் : எடை குறைய நான் எழுதிக் கொடுத்த மாத்திரை கிடைக்கலைங்கறீங்களே , மாத்திரை மாற்றி எழுதித் தரட்டுமா?

வந்தவர் : வேண்டாம் டாக்டர்! இந்த மாத்திரைக்கே நாளும் இப்படி அலைஞ்சால் எடை தானே குறைஞ்சிடும்.

**தொகுப்பு: மீனாள் கார்த்திக்.**
(Y0058)

<u>நகரத்தார் மலரில் இடம் பெறும் செய்திகள் / படைப்புகள்</u>

நகரத்தார் மலருக்கு கவிதைகள், கட்டுரைகள், செய்திகள் அனுப்ப விரும்புவோர் nasmalar@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு அனுப்பலாம். e-kalappai என்னும் தமிழ் மென்பொருளில் அனுப்ப முயற்சிக்க வேண்டுகிறோம். அல்லது மலர் படைப்புகளை, செய்திக் கடித உறுப்பினர்களிடம் மற்றும் சங்க நிர்வாக குழு உறுப்பினர்களிடம் அளிக்கலாம்.

## மகளிர் பக்கம்

**மிகவும் ருசியான பச்சை காலிஃபிளவர் சூப்**

தேவையானவை:
நடுத்தரமான பச்சை காலிஃபிளவர்-1
பெரிய வெங்காயம்-2
சிறிதளவு கறிவேப்பிலை
மிளகு-1 மேசைக்கரண்டி
சீரகம்-1 மேசைக்கரண்டி
பட்டை-2 சென்டிமீட்டர் அளவு
நெய்-1 மேசைக்கரண்டி
பால்-400 மில்லி லிட்டர்

செய்யும் முறை :

காலிஃபிளவர்,வெங்காயம்,கறிவேப்பில்லை ஆகியவற்றை கழுவி,நறுக்கி வைத்துக்கொள்ளவும்.அடுப்பில் வாணலியை காயவைத்து,நெய் ஊற்றி பட்டை,சீரகம், மிளகு,கறிவேப்பில்லை தாளித்து காலிஃபிளவர்,வெங்காயம் வதக்கி,தேவையான அளவு தண்ணீர் ஊற்றி

வேகவைக்கவும். வேக வைத்து ஆறிய பின் மிக்ஸியில் நைசாக அரைத்துக்கொள்ளவும்.அரைத்த கலவை,பால் 2 டம்ளர் மற்றும் உப்பு சேர்த்து கொதிக்கவிடவும். காரம் தேவைப்பட்டால்,பரிமாறும் போது சிறிதளவு மிளகுத்தூள் சேர்த்து பரிமாறலாம். உணவு சாப்பிடுவதற்கு அரை மணி நேரம் முன்பு இந்த சூப்பை சாப்பிட்டால் நல்ல பசியைக் கொடுக்கும்.

**திருமதி செல்லப்பன் சிவகாமி**
**[நீலா]** Y0282

**<u>முடி உதிர்வதை தவிர்க்க/வளர்வதை ஊக்குவிக்க ஒரு குறிப்பு:</u>**

செம்பருத்தி இலை [4 முதல் 6 இலை வரை] எடுத்து மிக்ஸியில் நன்றாக அரைத்து வாரம் ஒரு முறை தலையில் நன்றாக தேய்த்து , கூந்தலை அலசினால், கூந்தல் மிருதுவாகவும் பொலிவுடனும் காட்சியளிக்கும். முடி உதிர்வதையும் தவிர்க்கலாம்.வீட்டிலும் உள்ள ஆண்கள் கூட இந்த முறையை பின்பற்றலாம். ஷாம்பூ போல செம்பருத்தி இலை நன்றாக நுரை வரும்.ஆதலால் ஷாம்பூ பயன்படுத்துவதைத் தவிர்க்கலாம். அனைவரும் பின்பற்றி பயன்பெறலாம்.

**திருமதி.ஸ்வர்ணா ரவி**
(L084)

**<u>நகை (பாது)காப்பு</u>**

பெண்களுக்கு நகை என்றாலே ஒரு தனி கவர்ச்சிதான்! நகைகளை பற்றி நான் படித்து அறிந்த சில விவரங்களையும், அவற்றை பராமரிக்க உபயோகமான டிப்ஸ் சிலவற்றையும் இந்த இதழ் வாயிலாக உங்களுடன் பகிர்ந்து கொள்கிறேன்.

- ❖ வெள்ளிக் கொலுசுகளை அவ்வபோது சுத்தம் செய்வது நல்லது. ஒரு பழைய பல் துலக்கும் பிரஷ் கூட இதற்குப் போதும்.

- ❖ நிக்கல் சில்வர், ஜெர்மன் சில்வர் என்றும் சில உலோகங்கள் உண்டு. அவற்றைப் பயன்படுத்தியும் இப்போது நவநாகரிக நகைகள் செய்யப்படுகின்றன. ஆனால் இவற்றில் துளியும் வெள்ளி கிடையாது. அவற்றை வெள்ளி என்று நம்பி ஏமாந்து போய்விடாதீர்கள்.

❖ உடை அணிந்துகொண்டு, மேக்-அப் மற்றும் பாடிஸ்பிரே போன்றவற்றைப் போட்டுக்கொண்டு, அதன்பின் நகைகளை அணிந்து கொள்ளுங்கள். இல்லையெனில், அவற்றில் உள்ள ரசாயனப் பொருட்கள், நகைகளில் பாதிப்பை ஏற்படுத்தும் அபாயமுண்டு.

❖ சிலர் நகைகளை ஷாம்பூ கலந்த தண்ணீரில் சுத்தம் செய்வார்கள். அது சரியல்ல. அதனால் நகைகள் சீக்கிரமே அழுக்கடையும். ஷாம்பூ மற்றும் சோப்பு தண்ணீருக்கு பதிலாக பூங்காங்கொட்டை பயன்படுத்தியும் சுத்தம் செய்யலாம். பூங்காங்கொட்டையைத் தண்ணீரில் ஊறவைத்தால் நுரைத்துக் கொண்டு வரும். அதில் நகைகளை ஊறவைத்து, அலசி சுத்தம் செய்யலாம்.

❖ பாத்ரூம் டாய்லெட்களில் தீவிர அமிலத்தன்மை கொண்ட சோப்புகள், கிருமிநாசினிகள் போன்றவற்றைப் பயன்படுத்தும்போது நகைகளைக் கழற்றி வைத்துவிட்டு வேலை செய்யவும்.

❖ வங்கி லாக்கரில் பாதுகாப்புக்காக நகைகளை வைப்பது நம் அனைவருக்கும் வழக்கம். ஆனால், துணியாலான பைகளிலோ, நகைக்கடைகளில் தரப்படும் பெட்டிகளிலோ நகைகளைப் போட்டு வைப்பதற்குப் பதிலாக, மரத்தாலான பெட்டிக்குள் நகைகளைப் போட்டு வைத்தால், நகைகள் பொழிவு இழக்காமல் இருக்கும்.

❖ புடவையில் ப்ரூச் அணியும்போது, அது தோள்பட்டை பகுதியில் எடுப்பாகத் தெரியும்வண்ணம் அணிய வேண்டும். தாழ இருக்கக் கூடாது.

❖ முத்து மிகவும் மிருதுவானது என்பதால் முத்து பதித்த நகைகளை வைரம் மற்றும் தங்க நகைகளுடன் சேர்த்து வைக்கக் கூடாது.

❖ பட்டு நூல் கொண்டுதான் முத்துக்கள் கோர்க்கப்படுகின்றன. எனவே ஆண்டுக்கு ஒருமுறையாவது பட்டு நூல் நன்றாக உள்ளதா என்று பரிசோதிக்கவும்.

❖ பிளாட்டினம் 95% தூய்மையானது என்பதால் சரும அலர்ஜி உள்ளவர்கள் கூட பிளாட்டினம் நகைகளை அணியலாம். தங்க

நகைகள் மாதிரி, தொடர்ந்து அணிவதால் இவை தேய்மானம் அடைவதில்லை.

❖ பிளாட்டினம் நகைகள் வாங்கும் போது, பிளாட்டினம் கில்டு இண்டர்னேஷனல் வழங்கும் உத்திரவாத அட்டையைக் கேட்டு வாங்குங்கள், உலகம் முழுவதும் செல்லுபடியாகக்கூடிய சான்றிதழ் இது.

❖ வட இந்தியாவில் புகழ்பெற்ற குந்தன் நகைகள் மிகவும் நுணுக்கமான வேலைப்பாடுகள் கொண்டவை. அந்த நகைகளை, தனியே மெல்லிய பருத்தித் துணியில் சுற்றி வைக்க வேண்டும்.

❖ வங்கிக் கணக்கில் பணம் போடும்போதும், எடுக்கும்போதும் பாஸ்புக்கில் கணக்கு வைத்துக் கொள்வதைப் போல, வங்கி லாக்கரில் வைக்கிற, எடுக்கிற நகைகளுக்கும் தனிப்பட்ட முறையில் ஒரு டைரியில் குறித்து வைத்துக் கொள்ளுங்கள். வேண்டாத குழப்பங்களையும், டென்ஷனையும் இதன் மூலம் தவிர்க்கலாம்.

❖ நிறைய விலைக் உயர்ந்த கற்கள், வைரம் பதித்த நகைகளை அடிக்கடி அணிந்தாலும் சரி, அரிதாக அணிந்தாலும் சரி நம்பிக்கைக்குரிய நகைக்கடையில் ஆண்டுக்கு ஒருமுறை கொடுத்து செட்டிங் எல்லாம் சரியாக இருக்கின்றனவா என்று சரிபார்ப்பது நல்லது.

❖ தங்க நகைகள் தயாரிக்கப்படும்போது, அதனை சுத்தம்படுத்த பாதரசத்தை மிகவும் நுட்பத்துடன் பயன்படுத்துவார்கள். ஆனால் பாதரச விஷயத்தில் நாம் மிகுந்த கவனத்துடன் இருக்க வேண்டும். தர்மா மீட்டர்கள், ஃப்ளாஸ்க், கல்லூரிகளில் ரசாயனக் கூடங்கள், ஆராய்ச்சி சாலைகளில் தப்பித் தவறி பாதரசம், தங்க நகைகளில் பட்டு விட்டால், பாதரசம் தங்கத்தை அரித்து, அழித்து விடும். அதுபோன்ற சமயங்களில் உடனடியாக நகைக் கடைகளை அணுகினால் நகைகளைக் காப்பாற்றி விடலாம்.

❖ எப்போதும் நகையில் சிறந்தது புன்னகையே !

**- ஜோதி செந்தில்.**

L094

# <u>குழந்தைகள் பக்கம்</u>



குழந்தைகளே மேலே உள்ள சிங்கத்தை வண்ணம் தீட்டுங்கள்

| | |
|---|---|
| உங்களின் பெயர்: | தொடர்பு எண்: |
| வயது: | |

# இப்போட்டியில் மூன்று வயதிற்கு மேல் ஆறு வயதிற்க்குள்ள குழந்தைகள் மட்டுமே பங்கேற்கலாம்.

# வண்ணம் தீட்டி இப்பக்கத்தில் உங்களின் பெயர், வயது, தொடர்பு எண்ணுடன் பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் ஆலய அலுவகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அடுத்த மலரில் பிரசுரிக்கப்படும்

## <u>சிறுவர்கள் பக்கம்</u>

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | 3 | | | | | | 1 | |
| | | | | 9 | 1 | 7 | | |
| | 6 | | | | | 9 | 3 | 5 |
| 9 | 7 | 5 | 8 | | 6 | | 4 | |
| | 1 | 6 | 4 | | 9 | 5 | 8 | |
| | 4 | | 7 | | 3 | 6 | 9 | 1 |
| 6 | 5 | 7 | | | | | 2 | |
| | | 8 | 9 | 4 | | | | |
| | 9 | | | | | | 5 | |

சிறுவர்களே மேலே உள்ள "SUDOKU" வை பூர்த்தி செய்யுங்கள்

| | |
|---|---|
| உங்களின் பெயர்: | தொடர்பு எண்: |
| வயது: | |

# இப்போட்டியில் 6 வயதிற்கு மேல் 12 வயதுக்கு உள்ள சிறுவர்களே மட்டுமே பங்கேற்கலாம்.

# இப்பக்கத்தில் உங்களின் பெயர், வயது, தொடர்பு எண்ணுடன் பிப்ரவரி 20ஆம் தேதிக்குள் ஆலய அலுவகத்தில் வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

# வெற்றி பெற்றவர்களின் பெயர்கள் அடுத்த மலரில் பிரசுரிக்கப்படும்.

# <u>இதர செய்திகள்</u>

சந்தா பாக்கி:

சிங்கை நகரத்தார் சங்கத்தின் ஆண்டுச் சந்தா பாக்கி உள்ள உறுப்பினர்க்ள் சங்கப் பொருளாளர்களையோ, தலைவரையோ அணுகித் தங்கள் சந்தா பாக்கிகளை செலுத்தும்படி கேட்டுக் கொள்கிறோம் அல்லது தைப்பூசத்தன்று கோவிலில் உள்ள மகமை கட்டுமிடத்திலும் செலுத்தலாம்.

பிறப்புச் செய்திகள்:

நமது சங்க உறுப்பினர் திரு இரா. ராமநாதன் - திருமதி தேவிமீனாட்சி (L076) தம்பதியினருக்கு 05.11.2006 அன்று அடைக்கம்மை (எ) அபிராமி என்னும் பெண் குழந்தை பிறந்திருக்கின்றது. இம்மழலைச் செல்வத்திற்கு எங்களின் இதயம் கனிந்த வாழ்த்துக்கள்.

## கோயில் நிகழ்ச்சிகள்:-

விய வருடம் மாசி மாதம்:

| | | | |
|---|---|---|---|
| 15.02.2007 | மாசி 3 | வியாழன் | பிரதோஷம் |
| 16.02.2007 | மாசி 4 | வெள்ளி | மஹா சிவராத்திரி |
| 17.02.2007 | மாசி 5 | சனி | அமாவாசை |
| 21.02.2007 | மாசி 9 | புதன் | சுக்ல சதுர்த்தி |
| 23.02.2007 | மாசி 11 | வெள்ளி | கார்த்திகை - நாச்சியாபுரம் பெரி.பெ.வயி.உபயம் |
| 01.03.2007 | மாசி 17 | வியாழன் | பிரதோஷம் |
| 02.03.2007 | மாசி 18 | வெள்ளி | நடராஜர் அபிஷேகம் |
| 03.03.2007 | மாசி 19 | சனி | மாசி மகம் - மு. சிதம்பரம் பிள்ளை உபயம்*, பௌர்ணமி, சந்திர கிரஹணம் |
| 08.03.2007 | மாசி 24 | வியாழன் | மஹா சங்கடஹர சதுர்த்தி |
| 12.03.2007 | மாசி 28 | திங்கள் | தேய்பிறை அஷ்டமி |
| 16.03.2007 | பங்குனி 2 | வெள்ளி | பிரதோஷம் |
| 18.03.2007 | பங்குனி 4 | ஞாயிறு | அமாவாசை |
| 19.03.2007 | பங்குனி 5 | திங்கள் | அதிகாலை சூரிய கிரஹணம் |
| 22.03.2007 | பங்குனி 8 | வியாழன் | சுக்ல சதுர்த்தி |
| 23.03.2007 | பங்குனி 9 | வெள்ளி | கார்த்திகை - காரைக்குடி ராம.வீர.பெரி.வீர. உபயம் |
| 31.03.2007 | பங்குனி 17 | சனி | மஹாபிரதோஷம் |

* கோயில் நிர்வாகத்தில் பணம் கட்டியிருக்கிறது.

<u>புது உறுப்பினர்கள்</u>

| | |
|---|---|
| உறுப்பினர் எண் L219 | VCT. மணிவீரப்பன் - அலமேலு |
| கிட்டங்கி எண் 09 | Apt BLK 78 #20-485 Indus Road Singapore 161078 Tel/Hp: 62748575 / 91529554 Email:vctmani@rediffmail.com |
| இளையாத்தன்குடி பட்டனசாமி | |
| புதுப்பட்டி | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் L220 | செந்தில்நாதன் - காமாட்சி |
| கிட்டங்கி எண் 1A | BLK 36 #08-426 |

| | |
|---|---|
| இலுப்பக்குடி | Circuit Road |
| பனங்குடி | Singapore 370036<br>Tel/Hp: - / 97643812<br>Email: sen2040@hotmail.com |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0450 | அழகப்பன் - ஜானகி |
| கிட்டங்கி எண் 15 | BLK 403 #08-1210 |
| மாத்தூர் - மண்ணூர் | Yishun Avenue 6<br>Singapore 760403 |
| ஆ. முத்துப்பட்டிணம் | Tel/Hp: -<br>Email: alagaps@rediffmail.com |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0451 | அழகப்பன் |
| கிட்டங்கி எண் 01 | BLK 15 #07-61 |
| மாத்தூர் - அரும்பாக்கூர் | NO. 3 Kian Teck Lane<br>Singapore |
| சிறுகூடல்பட்டி | Tel/Hp: - / 81334307<br>Email: - |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0452 | M.சுப்பு ரவி - கவிதா |
| கிட்டங்கி எண் 09 | BLK 321 #04-315 |
| வைரவன் கோவில் பெரியவகுப்பு | Yishun Central<br>Singapore 760321 |
| புதுப்பட்டி | Tel/Hp: 65564218 / 82332545<br>Email: msuubr@ncs.com.sg |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0453 | T. முத்துக்குமார் - அன்னபூரணி |
| கிட்டங்கி எண் 1B | BLK 16 #04-107 |
| வைரவன் கோவில் பெரியவகுப்பு | Teck Whye Lane<br>Singapore 680016 |
| சிறுகூடல்பட்டி | Tel/Hp: 67633024 / 91379521<br>Email: tmrsir@yahoo.com |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0454 | RM. முத்துராமன் - லக்ஷ்மி |
| கிட்டங்கி எண் 01 | BLK 225 #04-601 |
| இளையாத்தன்குடி - கழனிவாசல் | Ang Mo Kio Avenue 1<br>Singapore 560225 |
| காரைக்குடி | Tel/Hp: 65432767 / 91728042<br>Email: rmmuthuraman2000@yahoo.com |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0455 | நாகராஜன் சம்பத் - லக்ஷ்மி |
| கிட்டங்கி எண் 09 | BLK 68#20-70 |
| மாத்தூர் - கருப்பூர் | Redhill Close<br>Singapore 150068 |
| அ. சிறுவயல் | Tel/Hp: 64006394 / 92716971<br>Email: natarajas@gmail.com |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0456 | இராமநாதன் - வள்ளி |

| | |
|---|---|
| கிட்டங்கி எண் 1B | BLK 27A #03-92<br>Bukit Batok East Avenue 4<br>Singapore 650274<br>Tel/Hp: 65693144 / 81801285<br>Email: keramanathan@yahoo.co.in |
| இளையாத்தன்குடி - கழனிவாசல் | |
| காரைக்குடி | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0457 | S. இராமசாமி - மீனாட்சி |
| கிட்டங்கி எண் 01 | BLK 871A #08-25<br>Tampines Street 84<br>Singapore 521871<br>Tel/Hp: 67832652 / 90127814<br>Email:ramaswamysrnvsn@yahoo.com.sg |
| இலுப்பக்குடி | |
| சிறுவயல் | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0458 | செந்தில்குமார் சிங்காரம் - மீனாட்சி |
| கிட்டங்கி எண் 09 | BLK 831 #02-66<br>Tampines Street 83<br>Singapore 520831<br>Tel/Hp: 67899664 / 82002410<br>Email: zenthilkumar@yahoo.com |
| மாத்தூர் - அரும்பாக்கூர் | |
| அலவாக்கோட்டை | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0459 | சீனிவாசன் சின்னான் செட்டி |
| கிட்டங்கி எண் 15 | BLK 902 #01-200<br>Tampines Avenue 4<br>Singapore 520902<br>Tel/Hp: 67283142 / 96784840<br>Email: srinivasan.chetty@gmail.com |
| வைரவன் கோவில் தையனார்வகுப்பு | |
| அரியக்குடி | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0460 | சாத்தப்பன் - கோதை |
| கிட்டங்கி எண் 09 | Email: - |
| பிள்ளையார்பட்டி | |
| வேகுப்பட்டி | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0461 | பழனியப்பன் - ராதா |
| கிட்டங்கி எண் 1A | BLK 20 #06-42 Westlite Dormitory<br>18 Toh Guan Road East<br>Singapore 608591<br>Tel/Hp: - / 92476530<br>Email: - |
| பிள்ளையார்பட்டி | |
| நாச்சியாபுரம் | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0462 | அண்ணாமலை மெய்யப்பன் எ விசாலாட்சி |
| கிட்டங்கி எண் 1B | 3B Pasi Panjang Apt #08 - 02<br>Singapore 161078<br>Tel/Hp: - / -<br>Email: - |
| இலுப்பக்குடி | |
| கோனாபட்டு | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0463 | லட்சுமணன் லட்சுமணன் - சிட்டுப்பொன்னி |
| கிட்டங்கி எண் 09 | BLK 501C #06-60<br>Wellington Circle<br>Singapore 750501<br>Tel/Hp: 64009387 / 94599417<br>Email: lll_konapet@hotmail.com |
| இலுப்பக்குடி | |
| கோனாபட்டு | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0464 | நாராயணன் சுப்பிரமணியன் |
| கிட்டங்கி எண் 15 | 3A #03-05 Pasir Panjang Road<br>Singapore<br>Tel/Hp: - / 91467637<br>Email: subbun81@yahoo.com.ind |
| பிள்ளையார்பட்டி | |
| கோனாபட்டு | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0465 | பழனியப்பன் - சீதாள் |
| கிட்டங்கி எண் 1A | BLK 117 #04-347<br>Bedok North Road<br>Singapore 460117<br>Tel/Hp: 64482270 / 90017505<br>Email: vpal_75@yahoo.com |
| இரணிக்கோவில் | |
| பலவான்குடி | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0466 | கண்ணன் சிதம்பரம் - அபிராமி |
| கிட்டங்கி எண் 1B | Apt BLK 77 #08-226<br>Telok Blangah Drive<br>Singapore 100077<br>Tel/Hp: - / 98817388<br>Email: kananc@gmail.com |
| பிள்ளையார்பட்டி | |
| தேவக்கோட்டை | |

| | |
|---|---|
| உறுப்பினர் எண் Y0467 | ராகவன் - மீனாட்சி |
| கிட்டங்கி எண் 01 | BLK 410 #07-3055<br>Commonwealth Avenue West Singapore 120410<br>Tel/Hp: 81838153 / 92223182<br>Email: pragavan@yahoo.com |
| பிள்ளையார்பட்டி | |
| தேவக்கோட்டை | |

## Change of address January 2007

| | | |
|---|---|---|
| L024 | V Ganesan | G Soodikodutthal |
| Block 29 #05-21 Marine Crescent Ville Singapore 440029<br>Phone: 62412009/81986465 | | |

| | | |
|---|---|---|
| L071 | Rm Periakaruppan | Valathammai |
| Block 46 #14-1431 Bendemeer Road Singapore 330046<br>Phone: 63924463/98216531 | | |

| | | |
|---|---|---|
| L076 | R Ramanathan | Devi Meenakshi |
| 200 Pasir Panjang Road #03-04 Pasir View Park Condominum<br>Singapore 118571 | | |

| |
|---|
| Phone: 62736755/96913985 |

| | | |
|---|---|---|
| Y0266 | S Venkatesh | Deepa Deivanai |
| Block 556 Woodlands Drive 53 #11-41 Singapore 730556<br>Phone: 67267609 | | |

| | | |
|---|---|---|
| Y0311 | KN Meyappan | M Unnamalai |
| Block 185B #12-117 Rivervale Crescent Singapore 542185<br>Phone: 63844467 | | |

| | | |
|---|---|---|
| Y0323 | S Murugappan | Meenakshi |
| Apartment Block 64 Commonwealth Drive #08-323 Singapore 140064<br>Phone: 63858585 | | |

| | | |
|---|---|---|
| Y0389 | Sathappan | Sundari |
| Block 318 #13-229 Sembawang Vista Singapore 750318<br>Phone: 67571732 | | |

| | | |
|---|---|---|
| Y0399 | AL Sathappan | S Meenakshi |
| Block 712, #06-158 Tampines Street 71 Singapore 520712<br>Phone: 67283470/98306658 | | |

| | | |
|---|---|---|
| Y0445 | Periakaruppan Mani | Azhakumeenal |
| Block 880, #06-255 Yishun Street 81 Singapore 760880<br>Phone: 81251385 | | |

| | | |
|---|---|---|
| Y0269 | Ramasubbu.S | Vimala |
| Blk 44 #02-49 Telok Blangah drive Singapore 100044<br>Phone: 90128129 | | |

Phone number change only

| | | |
|---|---|---|
| Y0033 | S Balasubramanian | Alamelu |
| Phone: 64027606/90670017 | | |

| | | |
|---|---|---|
| Y0137 | C Natarajan | N Meenal |
| Phone: 64025016/94246316 | | |

அறிவிப்பு :

புனர்பூசத்தன்று (31.01.07) இரவும் தைப்பூசத்தன்றும் (01.02.07) ஓய்வெடுப்பதற்காக கிட்டங்கியில் தங்கும் நகரத்தார்கள், கிட்டங்கியைச் சுத்தமாக வைத்திருக்க ஒத்துழைப்புத் தருமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். தைப்பூச அன்னதானத்தில் நகரத்தார்களும், தொண்டூழியர்களும் சாப்பிடுவதற்கு என உணவு பரிமாறும் இடத்தில் கடைசி இரண்டு வரிசைகள் ஒதுக்கப்பட்டுள்ளன. இந்த வசதியைப் பயன்படுத்திக் கொள்ள விரும்பும் நகரத்தார்கள் கிட்டங்கி வழியாக உணவு பரிமாறும் இடத்திற்கு வந்து, மற்ற பக்தர்களுக்கு இடையூறு இல்லாமல் உணவு சாப்பிட்டுச் செல்லுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.




- நாச்சம்மை அழகப்பன், L031